DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 207/2015
Deposition of PW4/ LW15

| | | |
|---|---|---|
| Name | : | திரு.நல்லு |
| Father's / Husband Name | : | சின்னாக்கவுண்டர் |
| Village | : | பெரியகுளம் |
| Taluk | : | பெரியகுளம் |
| Calling | : | காவல் துணை கண்காணிப்பாளர் |
| Religion | : | இந்து |
| Age | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30.09.2025
எதிரி ஆஜர்.

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

1.) நான் தற்போது தேனி மாவட்டம் பெரியகுளம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். 2015 ம் வருடம் ஆண்டிபட்டி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 22.02.2015 ம் வருடம் 20.35 மணிக்கு ஆண்டிபட்டி வைகை அணை சிறப்பு சார்பு ஆய்வாளர் அய்யாச்சாமி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது க.விலக்கு மருத்துவமனையில் இருந்து கிடைப்பெற்ற தகவலை பெற்று என்பவர் அங்கு சிகிச்சையில் இருந்த ஜக்கம்பட்டியை சேர்ந்த வேல்முருகன் என்பவரிடம் புகார்வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து வைகை அணை காவல் நிலைய குற்ற எண். 202/2015 , இதச பிரிவுகள் 279,337,304(A) வழக்கு பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2.**

2.) அன்றைய தினமே இவ்வழக்கினை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 22.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுரேஷ் மற்றும் பெரியகருப்பையா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ–3. மாதிரி வரைபடம் அசாஆ 4.**

3.) 23.02.2015 ம் தேதி காலை 8.00 to 10.00 மணிக்கு இறந்து போன கருப்பசாமி என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் 1540 திரு.பரமத்துரை என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அசாஆ .5**

3.) அன்றே சாட்சிகள் 1 வேல்முருகன், 2 மூனிஸ்வரன், 3 நாகராணி, 4 வைரமணி, 5 காமாட்சி, 6 சத்யா, 7 சின்னசாமி மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 27.04.2015 ம் தேதி காலை 11.00 மணிக்கு வைகை அணை காவல் நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன்.

4.) பின்பு 27.04.2015 ம் தேதி விபத்திற்கு காரணமான வாகனமான TN 57 – 2793 என்ற Ashok Lyland Lorry மற்றும் விபத்திற்குண்டான வாகனமான TN 58 E 3712 என்ற TVS Suzuki இருசக்கர வாகனத்தினையும் தேனி வட்டார போக்குவரத்து அலுவலகத்துக்கு மோட்டார் வாகன ஆய்விற்காக வேண்டுதல் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன்.

5.) பின்பு 14.06.2015 தேனி வட்டார போக்குவரத்து ஆய்வாளர் கணேச சுப்பிரமணியம் அவர்களை விசாரித்து வாகன ஆய்வறிக்கைகள் கிடைக்கப்பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **TN 57 – 2793 என்ற Ashok Lyland Lorry ன் ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 மற்றும் TN 58 E 3712 என்ற TVS Suzuki ன் ஆய்வறிக்கை அ.சா.ஆ.7.** பின்பு அன்றே இறந்துபோன கருப்பசாமி என்பவருக்கு பிரேதபரிசோதனை செய்த க.விலக்கு அரசு மருத்துவமனை மருத்துவர் அருண்குமார் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ 8.** இவ்வழக்கில் காயம் பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பெல்சி மெல்பா அவர்களை விசாரித்து காயச்சான்று கிடைக்கப்பெற்று காய்ச்சான்று பதிவுசெய்தேன். **காயச்சான்று அசாஆ 9.**

5.) அன்றைய தினமே த.கா. பரமத்துரை மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.அய்யாசாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவு 279,337,304(A) இதச –ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கின் 3 வது சாட்சி சம்பவத்தினை நேரில் பார்க்கவில்லை என்றும், அவர் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட சாட்சி ஆவார் என்றால் சரியல்ல. விபத்து சம்பவயிடம் வளைவான பகுதி என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன கருப்பசாமி என்பவரும் அ.சா.1 ம் குடிபோதையில் இருசக்கர வாகனத்தினை ஓட்டிச் சென்று எதிரி ஓட்டிவந்த லாரியில் மோதி விபத்தினை ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் காயம் பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பெல்சி மெல்பா அவர்களை நான் விசாரித்து வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரிதான். அசா.ஆ.9 ல் Breath smell of alcohol என்று மருத்துவரால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. சம்பவயிடத்திற்கு நான் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 22.45 மணிக்கு சென்றேன். சம்பவயிடத்தில் இருந்த இருசக்கர வாகனத்தில் இருந்து பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். வாதியிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டு எதிரியின் மீது பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யாமல் ஆஜர் எதிரி மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல .

3. எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு புகார்தாரரும் , வழக்கில் இறந்தவரும் குடிபோதையில் வாகனத்தினை ஓட்டியது தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்தில் நஷ்ட ஈடு பெற வேண்டி எதிரி மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.09.30 17:22:44 +0530

Judicial Magistrate,
Andipatti.